इந்திய ரிசர்வ் வங்கி
भारतीय रिज़र्व बैंक
RESERVE BANK OF INDIA
वेबसाइट: www:rbi.org.in/hindi
Website: www.rbi.org.in
ई-मेल: Email: helpdoc@rbi.org.in

संचार विभाग, केंद्रीय कार्यालय,एस.बी.एस.मार्ग, मुम्बई ४००००१
DEPARTMENT OF COMMUNICATION, Central Office, S.B.S. Marg, Mumbai – 400001
फोन/Phone: 91 22 2266 0502 फैक्स/Fax: 91 22 22660358

அக்டோபர் 13, 2017

## HCBL கூட்டுறவு வங்கி லிமிடெட், லக்னௌ, உத்தரப்பிரதேசம் வங்கிக்கு இந்திய ரிசர்வ் வங்கி வழிகாட்டுதல் உத்தரவை நீட்டிக்கிறது

இந்திய ரிசர்வ் வங்கி, HCBL கூட்டுறவு வங்கி, லக்னௌ, உத்தரப்பிரதேசம் வங்கிக்கு, வழிகாட்டுதல் உத்தரவினை மறுஆய்வுக்கு உட்பட்டு அக்டோபர் 16, 2017 முதல் ஏப்ரல் 15, 2018 வரை மேலும் 6 மாதங்களுக்கு நீட்டிக்கிறது. வங்கிகள் ஒழுங்குமுறைச் சட்டம் 1949 (AACS - கூட்டுறவு வங்கிகளுக்கும் பொருந்தும்)-ன் பகுதி 35A-ன் கீழ் ஏப்ரல் 10, 2015 தேதியிட்ட வழிகாட்டுதல் உத்தரவு மூலம் இந்திய ரிசர்வ் வங்கி மேற்படி வங்கி மீது ஏப்ரல் 16, 2015 அன்று வேலை நேர முடிவிலிருந்து கட்டுப்பாடுகளை விதித்தது. இந்த கட்டுப்பாடுகள் அக்டோபர் 09, 2017 தேதியிட்ட உத்தரவின்படி ஏப்ரல் 15, 2018 வரை மேலும் நீட்டிக்கப்படுகிறது. அவ்வப்போது திருத்தப்பட்ட உத்தரவுகளின் கீழ் உள்ள மற்ற விதிமுறைகளும் நிபந்தனைகளும் மாறாமல் இருக்கும். பொதுமக்கள் பார்வையிடும் வண்ணம் அக்டோபர் 09, 2017 தேதியிட்ட உத்தரவின் பிரதி, வங்கியின் வளாகத்தில் அறிவிப்புப் பலகையில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படும்.

இவ்வாறு, இந்திய ரிசர்வ் வங்கி மாற்றங்கள் செய்ததை மட்டுமே கருத்தில்கொண்டு வங்கியின் நிதிநிலை மேம்பாட்டதாகவோ மோசமடைந்துவிட்டதாகவோ கருதக்கூடாது. இந்திய ரிசர்வ் வங்கி அவ்வப்போது சூழ்நிலைக்குத் தகுந்தவாறு உத்தரவுகளை திருத்தியமைக்கும்.

(அஜித் பிரசாத்)
உதவி ஆலோசகர்

**பத்திரிகை வெளியீடு - 2017-2018/1032**